# சந்திரயான்-3 ரோவர் ஆய்வு தொடக்கம்

**பெங்களூரு, ஆக. 24:** சந்திரயான்-3 விண்கலத்தின் விக்ரம் லேண்டர் கலனில் இருந்து வெற்றிகரமாக வெளியேறி நிலவில் தரையிறங்கிய ரோவர் கலன், தரையிறங்கிய சுற்றுப் பகுதியில் ஆய்வுப் பணிகளைத் தொடங்கியது.

நிலவின் தென் துருவத்தில் ஆய்வு செய்வதற்காக செலுத்தப்பட்ட சந்திரயான்-3 விண்கலத்தின் விக்ரம் லேண்டர் கலன் புதன்கிழமை (ஆக. 23) மாலை 6.04 மணிக்கு மென்தரையிறக்கத்தின் மூலம் நிலவின் தரைப் பகுதியில் வெற்றிகரமாக இறங்கியது.

அதன் பிறகு 3.30 மணி நேரம் கழித்து, ரோவர் ஆய்வுக் கலன் தரையிறங்குவது உறுதி செய்யப்பட்டது. ரோவர் தரையிறங்குவதற்கு முன், விக்ரம் லேண்டர் தரையிறங்கியபோது, நிலவின் தரைப் பகுதியில் எழுந்த புழுதி அடங்கி, தெளிவான பார்வைச்சூழல் ஏற்படுவதற்காக இவ்வளவு நேரம் காத்திருக்க நேர்ந்ததாக இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

புழுதி அனைத்தும் அடங்கிய பிறகு, பெங்களூரு, பைலாலுவில் உள்ள இந்திய ஆழ்விண்வெளி மையத்தில் இருந்து அளிக்கப்பட்ட சமிக்ஞைகளின் அடிப்படையில், விக்ரம் லேண்டர் கலனின் பக்கவாட்டில் பொருத்தப்பட்டிருந்த சரிவுத்தளம் புதன்கிழமை இரவு 9.30 மணி அளவில் திறக்கப்பட்டது. அதன்பிறகு, சரிவுத்தளத்தின் வாயிலாக 6 சக்கரங்கள் கொண்ட 26 கிலோ எடையுள்ள 'பிரக்யான்' ரோவர் கலன் மெதுவாக ஊர்ந்து சென்று நள்ளிரவு 12.30 மணி அளவில் தரையிறங்கியது.

அதன்பிறகு பிரக்யான் ரோவர் மற்றும் விக்ரம் லேண்டர் பரஸ்பரம் படம் எடுத்துக்கொண்டு, அதை பூமியில் உள்ள தரைக் கட்டுப்பாட்டு மையத்துக்கு அனுப்பி வைத்தன.

## 500 மீ. சுற்றளவில் 14 நாள்கள் வலம் வரும்



விக்ரம் லேண்டரிலிருந்து சரிவுத்தளம் வழியாக இறங்கிய பிரக்யான் ரோவர்.

- ரோவரில் இடம்பெற்றுள்ள ஆல்ஃபா துகள் எக்ஸ் ரே நிறமாலைமானி நிலவு மண், கற்களின் வேதியியல் தன்மையை ஆய்வு செய்யும்.
- ரோவரின் ஆய்வுப் பணி, தற்போது திட்டமிடப்பட்டுள்ள 14 நாள்களைக் கடந்தும் நீடிக்கும் என இஸ்ரோ தலைவர் நம்பிக்கை.

இது குறித்து தனது எக்ஸ் வலைதளத்தில் இஸ்ரோ, 'சந்திரயான்-3 ரோவர், லேண்டரில் இருந்து மெதுவாக இறங்கியது. விக்ரம் லேண்டர், பிரக்யான் ரோவர் இரண்டும் சீராகச் செயல்பட்டு வருகின்றன. ரோவரில் பொருத்தப்பட்டுள்ள கருவிகள் சீராக உள்ளன; திட்டமிட்டபடி எல்லா நடவடிக்கைகளும் சிறப்பாக நடந்து வருகின்றன. லேண்டரில் உள்ள ஆய்வுக் கருவிகள் இலஸ்ஏ, ராம்பா, சேஸ்ட் ஆகியவை இயக்கப்பட்டுள்ளன. ரோவரின் வலம் வரும் பணி தொடங்கியுள்ளது' என்று கூறியுள்ளது.

**ஆய்வுப் பணி:** நிலவில் விக்ரம் லேண்டர் தரையிறங்கிய பகுதியில் இருந்து 500 மீட்டர் சுற்றளவில் 14 நாள்கள் வலம் வர இருக்கும் ரோவர், மெதுவாகப் பயணித்து நிலவின் பரப்பை ஆராய்ச்சி செய்யத் தொடங்கிவிட்டது.

சூரிய ஒளித் தகடுகள் மூலம் கிடைக்கும் ஆற்றலில் இயங்கும் லேண்டர் மற்றும் ரோவர் கருவிகளில் பொருத்தப்பட்டுள்ள கருவிகள் ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளத் தொடங்கிவிட்டன.

நிலவின் மேற்பரப்பில் உள்ள மண், கற்கள், கனிமங்களின் தன்மை ஆராயப்படும். மேலும், நிலவில் நீர்ப்பனி இருக்கிறதா என்பதும் ஆராயப்படும். நிரந்தரமாக நிழல் பகுதியில் அமைந்திருக்கும் தென் துருவத்தில் தண்ணீர் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக கூறப்படுகிறது.

நிலவின் வளிமண்டல பரிணாமங்கள் ஆய்வுக்குட்படுத்தப்படும். இதன்மூலம், நிலவின் தென் துருவத்தில் ஆய்வு மேற்கொள்ளும் முதல் நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றுள்ளது.

**இஸ்ரோ நம்பிக்கை:** நிலவில் தடம் பதித்துள்ள விக்ரம் லேண்டர், பிரக்யான் ரோவரின் ஆய்வுப் பணி, தற்போது திட்டமிடப்பட்டுள்ள 14 நாள்களைக் கடந்தும் நீடிக்கும் என்று இஸ்ரோ நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து இஸ்ரோ தலைவர் எஸ்.சோமநாத் கூறுகையில்,'14 பூமி நாள்களில் ஆய்வுப் பணிகளை முடிக்க வேண்டும். சூரிய ஒளி கிடைக்கும் வரைதான் அதன் மின்சாரத்தில் எல்லா கருவிகளும் இயங்கும். சூரியன் மறைந்ததும், நிலவின் தென் துருவம் இருண்டு விடும். அப்பகுதியின் தட்பவெப்பம் மைனஸ் 180 டிகிரி அளவுக்கு சரிந்துவிடும். அந்த சமயத்தில் ஆய்வுக் கருவிகள் தாக்குப்பிடித்து இயங்குவது கடினம்.

14 இருள் நாள்களுக்குப் பிறகு ஆய்வுக் கருவிகள் மீண்டும் உயிர் பெற்றுச் செயல்பட ஆரம்பித்தால் மகிழ்ச்சி அடைவோம். அதன் பிறகு மேலும் 14 நாள்களுக்கு அறிவியல் ஆராய்ச்சியில் ஈடுபட முடியும். அது நடக்கும் என்று நம்புகிறோம். நிலவின் தரைப் பகுதியில் கிடைக்கும் பொருள்களை அங்கேயே வைத்து ரோவர் ஆய்வுக்குட்படுத்தும். நிலவின் தரைப்பகுதியை ரோவர் ஆய்வுசெய்யும்.

நிலவுமண், கற்களின் வேதியியல் தன்மையை ஆல்ஃபா துகள் எக்ஸ் ரே நிறமாலைமானி ஆய்வுசெய்யும். ரோவரில் இடம்பெற்றுள்ள மற்றொரு ஆய்வுக் கருவியான எல்.ஐ.பி.எஸ். (லேசரால் தூண்டப்பட்ட பிரேக்டவுன் ஸ்பெக்ட்ரோஸ்கோப்) கருவி கனிம வளங்களை ஆராய்ந்து, அவற்றின் வேதியியல் தன்மையைக் கண்டறியும். நிலவுப் பரப்பை மேலும் புரிந்துகொள்ள நமக்கு இந்த ஆய்வுகள் உதவும். நிரந்தர நிழல் பகுதியாக விளங்கும் தென் துருவத்தில் தண்ணீர் (பனிப்பாறைகள்) இருக்க வாய்ப்புள்ளது. அதையும் ஆராய்வோம். ரோவர் சேகரிக்கும் தகவல்கள், படங்கள் லேண்டருக்கு அனுப்பப்படும். அத்தகவல்கள், படங்களை லேண்டர் பூமிக்கு அனுப்பிவைக்கும்' என்றார்.

## இஸ்ரோ விஞ்ஞானிகளைப் பாராட்ட பிரதமர் நாளை பெங்களூரு வருகை



**பெங்களூரு, ஆக. 24:** சந்திரயான்- 3 விண்கலனில் உள்ள விக்ரம் லேண்டர் கலன் நிலவில் வெற்றிகரமாக தரையிறக்கப் பாடுபட்ட இஸ்ரோ விஞ்ஞானிகளை பாராட்டுவதற்காக பிரதமர் மோடி பெங்களூருக்கு சனிக்கிழமை (ஆக. 26) வருகிறார்.

தென்னாப்பிரிக்காவின் ஜோஹன்னஸ்பர்க் நகரில் நடைபெற்ற பிரிக்ஸ் சர்வதேச மாநாட்டில் கலந்துகொள்வதற்காக சென்றிருக்கும் பிரதமர் மோடி, சந்திரயான் -3 விண்கலத்தின் விக்ரம் லேண்டர் நிலவில் தடம் பதித்த தருணத்தை அங்கிருந்தபடியே காணொலியில் பார்வையிட்டு இஸ்ரோவின் சாதனையை வெகுவாக பாராட்டிப் பேசினார்.

இஸ்ரோ விஞ்ஞானிகளின் சாதனையை உலகமே பாராட்டி வரும் நிலையில், தனது பயணத்தை முடித்துக்கொண்டு நேரடியாக பெங்களூருக்கு சனிக்கிழமை வருகைதர திட்டமிட்டுள்ள பிரதமர் மோடி, இஸ்ரோ விஞ்ஞானிகளை நேரடியாக பாராட்டவிருக்கிறார்.

பெங்களூருக்கு சனிக்கிழமை வரும் அவர், இஸ்ரோ தரைக் கட்டுப்பாட்டு மையம் அமைந்திருக்கும் பீன்யாவில் ஒருமணி நேரம் திறந்த வேனில் ஊர்வலம் சென்று மக்களைச் சந்திக்கவிருக்கிறார். அதன் பிறகு தரைக் கட்டுப்பாட்டு மையத்தில் சந்திரயான்-3 விண்கல திட்டப் பணியில் ஈடுபட்ட விஞ்ஞானிகளைப் பாராட்டி கௌரவிக்கிறார்.

# உலகக் கோப்பை செஸ்: பிரக்ஞானந்தாவுக்கு வெள்ளி

**பாகு, ஆக. 24:** அஜர்பைஜானில் நடைபெற்ற உலகக் கோப்பை செஸ் போட்டியில் இந்தியரும், தமிழருமான ஆர்.பிரக்ஞானந்தா 2-ஆம் இடம் பிடித்து வெள்ளிப் பதக்கம் பெற்றார். உலகின் நம்பர் 1 வீரரான நார்வேயின் மேக்னஸ் கார்ல்சென் சாம்பியன் கோப்பை வென்றார்.

இவ்விருவரும் மோதிய இறுதிச்சுற்றின் முதலிரு கிளாசிக்கல் ஆட்டங்களும் முறையே செவ்வாய் (ஆக.22), புதன்கிழமை (ஆக.23) டிராவில் முடிந்தன. இதையடுத்து வெற்றியாளரை தீர்மானிப்பதற்கான 2 'டை-பிரேக்கர்' ஆட்டங்கள் வியாழக்கிழமை (ஆக.24) நடைபெற்றன.

அதில் முதல் ஆட்டத்தில் கார்ல்சென் வெல்ல, 2-ஆவது ஆட்டம் 22-ஆவது நகர்த்தலில் டிரா ஆனது. இதனால் கார்ல்சென் 1.5 - 0.5 என்ற புள்ளிகள் கணக்கில் பிரக்ஞானந்தாவை வீழ்த்தி தனது முதல் உலகக் கோப்பை பட்டத்தை வென்றார்.



'டை-பிரேக்கர்' ஆட்டத்தில் கார்ல்சென் – பிரக்ஞானந்தா.

ஏற்கெனவே 3 முறை கார்ல்சென்னை வீழ்த்தியிருந்தாலும், இம்முறை பிரக்ஞானந்தாவின் வியூகம் அவரிடம் பலிக்காமல் போனது. என்றாலும், உலகக் கோப்பை செஸ் போட்டியில் விஸ்வநாதன் ஆனந்துக்குப் பிறகு இறுதிச்சுற்று வரை வந்த முதல் இந்தியர், இந்தப் போட்டியின் வரலாற்றில் இறுதிச்சுற்றுக்கு வந்த இளம் போட்டியாளர் (18) என்ற பெருமைகளை பிரக்ஞானந்தா பெற்றுள்ளார்.

அத்துடன், ரொக்கப் பரிசாக பிரக்ஞானந்தாவுக்கு சுமார் ரூ.66.13 லட்சமும், கார்ல்செனுக்கு ரூ.90.93 லட்சமும் வழங்கப்பட்டது. 'சாம்பியன்' கார்ல்சென், 'ரன்னர்-அப்' பிரக்ஞானந்தா, 3-ஆம் இடம் பிடித்த அமெரிக்காவின் ஃபாபியானோ கருனா ஆகியோர் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள கேண்டிடேட்ஸ் செஸ் போட்டிக்கு தகுதிபெற்றனர். அதற்குத் தகுதிபெற்ற 3-ஆவது இளம் போட்டியாளர் என்ற பெருமையும் பிரக்ஞானந்தாவுக்கு கிடைத்துள்ளது.

**பாராட்டு:** உலகக் கோப்பை செஸ் போட்டியில் 2-ஆம் இடம் பிடித்த பிரக்ஞானந்தாவுக்கு, குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோடி, முதல்வர் மு.க. ஸ்டாலின், செஸ் நட்சத்திரம் விஸ்வநாதன் ஆனந்த், கிரிக்கெட் நட்சத்திரம் சச்சின் டெண்டுல்கர் உள்ளிட்ட பல்வேறு பிரபலங்களும் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

# கனவுத் திட்டம் நனவாக...

**பெ. சுப்ரமணியன்**

தமிழகத்தில் உயர்கல்வியில் சேர்க்கையை அதிகரிக்கவும் மேம்படுத்தவும் அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதே வேளையில் கல்லூரி மாணவர்களிடையே கற்றல் திறன் குறைவாக உள்ளது என்பதை மறுப்பதற்கில்லை.

பட்டம் பெற்று வேலைக்குச் செல்வோரிடம் நிலவும் இக்குறைபாட்டைப் போக்க பட்டதாரி இளைஞர்களின் சிந்தனை ஆற்றலை மேம்படுத்தும் நோக்கில் தமிழக அரசால் கடந்த ஆண்டு 'நான் முதல்வன்' எனும் திட்டம் தொடங்கப்பட்டது.

இளைஞர்களுக்கு பல்வேறு திறன் பயிற்சிகளை வழங்கக்கூடிய வல்லுநர்களைக் கண்டறிந்து மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் சரளமாகப் பேசுவது எப்படி, வார்த்தைகளை எப்படி உச்சரிப்பது போன்ற பயிற்சிகளை வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

ஆண்டுக்கு பத்து லட்சம் பேருக்கு இவ்வகை பயிற்சிகள் அளிப்பது என இலக்கு நிர்ணயிக்கப்பட்டாலும் இலக்கைத் தாண்டி 13 லட்சம் பேர் பயிற்சி பெற்றுள்ளனர்.

ஒவ்வொரு கல்லூரியிலும் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில் கல்லூரி பேராசிரியர்கள், கௌரவ விரிவுரையாளர்களுக்கு அந்தந்த பகுதிகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் சிறப்பு வல்லுநர்களைக் கொண்டு ஒரு வார காலம் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் பயிலும் பாடப் பிரிவுகளுக்கு ஏற்ப பயிற்சி அளிக்கப்பட்டு சான்று வழங்கப்படுகிறது.

இலவசமாக வழங்கப்படும் இப்பயிற்சியை தனியார் பல்கலைக்கழகம், கல்லூரிகள், இதர நிறுவனங்களில் பெற வேண்டுமாயின், ஆயிரக்கணக்கில் செலவிட வேண்டியுள்ளது. ஆனால், இத்திட்டத்தில் இலவசமாக பயிற்சி பெற முடியும் என்றபோதும் இது குறித்த விழிப்புணர்வு மாணவர்களிடம் முழுமையான அளவில் இல்லை.

முதன்மை உயர்கல்வி நிறுவனங்கள் நடத்தும் இப்பயிற்சியில் வழங்கப்படும் சான்று மதிப்புமிக்கது. மாணவர்கள் வழக்கமான கல்லூரி நடவடிக்கைகள் போன்றே இப்பயிற்சியையும் கருதுகின்றனர். இந்நிலையை மாற்றி இப்பயிற்சி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி பயிற்சியில் அனைவரையும் பங்கேற்கச் செய்வது பேராசிரியர்களின், கௌரவ விரிவுரையாளர்களின் கைகளில் தான் உள்ளது.

'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் மேலும் பல செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குடிமைப்பணி தேர்வில் தமிழக மாணவர்களின் தேர்ச்சி விகிதத்தை அதிகரிக்கும் பொருட்டு போட்டித் தேர்வு பிரிவு தொடங்கப்பட்டுள்ளது. குடிமைப்பணி முதல்நிலை தேர்வுக்கு பயிற்சி பெற ஆயிரம் பேருக்கு ரூ. 7,500, முதன்மைத் தேர்வுக்கு ரூ. 25 ஆயிரம் உதவித்தொகை பெற விண்ணப்பிக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

குடிமைப்பணி தேர்வில் தமிழக மாணவர்களின் தேர்ச்சி விகிதம் 2015-ஆம் ஆண்டில் 10 சதவீதத்திற்கு மேல் என்று இருந்த நிலை மாறி தற்போது 5 சதவீதமாகக் குறைந்துவிட்டது. தேர்ச்சி விகிதத்தை அதிகரிக்கும் நோக்கில் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

மேலும், பள்ளிப்படிப்புக்குப் பின்னர் மாணவர்கள் உயர்கல்வி பயில ஊக்கப்படுத்தும் வகையில் 'உயர்வுக்குப் படி', 'கல்லூரிக் கனவு' ஆகிய திட்டங்களும் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டங்களின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறப்பு முகாம் நடத்தி பள்ளிக்கல்வியை முடித்து உயர்கல்வியை தொடராத மாணவர்கள், கல்லூரி, தொழில்நுட்பக் கல்லூரி, தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்க்கை பெற்றுள்ளனர்.

உயர்கல்வியைப் பொறுத்தவரை சிறப்பான திட்டம் என்றாலும் அதில் சில நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியது அவசியமாகும். கல்லூரிகளில் அக்கறையுடன் இத்திட்டம் குறித்து விளக்கினாலும் பாட வகுப்புகள் போன்று அலட்சியப் போக்கே நிலவக்கூடும். அதனால் பலனேதும் இருக்கப்போவதில்லை. மாணவர்களின் இத்தகைய மனநிலையால் பேராசிரியர்கள் மத்தியிலும் அலட்சியப்போக்கு உண்டாகும்.

அதனால் அனைத்து கல்லூரிகளிலும் மாணவர்களை ஒருங்கிணைத்து பேராசிரியர்களுக்குப் பயிற்சி அளித்த வல்லுநர்கள் இத்திட்டத்தின் நோக்கம், செயல்பாடுகள், பயன்கள் குறித்து எடுத்துரைக்கும்போது பலன் கிடைக்கும். அரசுப்பணி கனவுடன் கல்லூரிப் படிப்பைத் தொடரும் மாணவர்களுக்கு இப்பயிற்சி வகுப்புகள் எதிர்காலத்தில் பயனுள்ளதாக இருக்கும் என்பதை எடுத்துக் கூற வேண்டும்.

அடுத்தபடியாக, போட்டித்தேர்வு எழுதும் மாணவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கும் போது சில நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் தேர்வு செய்யப்பட வேண்டும். பட்டப்படிப்பில் பல்கலைக்கழக அளவில் சிறப்பிடம் பெற்றவர்களைக் கண்டறிந்து அவர்களில் குடிமைப்பணி தேர்வு எழுத ஆர்வம் கொண்டவர்களைத் தேர்வு செய்து ஊக்கத் தொகை வழங்க வேண்டும்.

இவ்வாறு தேர்வு செய்யப்படுவதில் எவ்விதமான அரசியல் தலையீடோ, பாகுபாடோ இருக்கக்கூடாது. தேர்வு செய்யப்பட்டவர்களும் ஊக்கத்தொகைக்காக அல்லாமல் தேர்ச்சி பெறவேண்டும் என்ற குறிக்கோளுடன் தங்களை போட்டித்தேர்வுக்கு தயார்செய்ய வேண்டும்.

ஊக்கத்தொகை வழங்க தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு அரசால் வழங்கப்படும் தொகையை முழுமையாக வழங்காமல் அத்தொகையில் குறிப்பிட்ட அளவில் குடிமைப்பணி தேர்வுக்குப் பயன்படும் நூல்களை வழங்குவதும் பயனுள்ளதாக இருக்கும். போட்டித் தேர்வுக்கான நூல்கள் சிறு நகரங்களில் கிடைப்பதில்லை. பெருநகரங்களில் மட்டுமே கிடைக்கும் நூல்களை சிறு நகரங்களைச் சேர்ந்தவர்கள் வாங்கிப் படிப்பதற்கான வாய்ப்புகள் குறைவு.

'கல்லூரிக் கனவு' திட்டத்தின் கீழ் 75 ஆயிரம் பேரும், 'உயர்வுக்குப் படி' திட்டத்தின் கீழ் 2.50 லட்சம் பேரும் சேர்க்கை பெற்றுள்ளனர். ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறப்பு முகாம் நடத்தப்பட்டு உயர்கல்வியில் சேர்க்கை பெறாத மாணவர்கள் கண்டறியப்பட்டனர்.

அவர்களை கல்லூரி, தொழில்நுட்பக் கல்லூரி, தொழிற்பயிற்சி நிலையம் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றில் சேர்க்கை பெறச் செய்வது தான் இத்திட்டத்தின் நோக்கமாகும். அதன்படி அதிகப்படியானோர் அரசு கல்லூரி, தனியார் கல்லூரி, தொழில் சார்ந்த படிப்புகளில் சேர்க்கை பெற்றுள்ளனர். சேர்க்கை பெறாதோரை கண்டறிந்து சேர்க்கை பெறச் செய்வது அவசியமாகும்.

# பிரிக்ஸ் கூட்டமைப்பில் புதிதாக 6 நாடுகள் இணைப்பு

## ஜோஹன்னஸ்பர்க் மாநாட்டில் ஒருமித்த முடிவு


**ஜோஹன்னஸ்பர்க், ஆக. 24:** பிரிக்ஸ் கூட்டமைப்பில் ஆர்ஜென்டீனா, எகிப்து, எத்தியோப்பியா, ஈரான், சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய 6 நாடுகளைப் புதிய உறுப்பினர்களாக இணைக்க ஜோஹன்னஸ்பர்க் மாநாட்டில் ஒருமித்த முடிவெடுக்கப்பட்டது.

பிரேஸில், ரஷியா, இந்தியா, சீனா ஆகிய நாடுகள் இணைந்து 'பிரிக்' கூட்டமைப்பை 2006-ஆம் ஆண்டில் நிறுவின. அக்கூட்டமைப்பில் 2010-ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்கா இணைக்கப்பட்டவுடன், 'பிரிக்ஸ்' என மாறியது. வளர்ந்து வரும் பொருளாதார சக்திகள் இணைந்து உருவாக்கிய முக்கிய பன்னாட்டு கூட்டமைப்பாக பிரிக்ஸ் திகழ்ந்து வருகிறது.

பிரிக்ஸ் கூட்டமைப்பின் 15-ஆவது மாநாடு தென்னாப்பிரிக்காவின் ஜோஹன்னஸ்பர்கில் கடந்த 22-ஆம் தேதி தொடங்கி நடைபெற்றது. அதில் புதிய உறுப்பினர்களைக் கூட்டமைப்பில் இணைப்பது தொடர்பாக விரிவாக விவாதிக்கப்பட்டது. ஒருமித்த கருத்தின் அடிப்படையில் புதிய உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ள இந்தியா ஆதரவளிக்கும் என பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், பிரிக்ஸ் மாநாடு வியாழக்கிழமை நிறைவடைந்தது. பிரிக்ஸ் கூட்டமைப்பில் 6 நாடுகளைப் புதிய உறுப்பினர்களாக இணைத்துக் கொள்ள மாநாட்டில் ஒருமனதாக முடிவெடுக்கப்பட்டது. அதன்படி, ஆர்ஜென்டீனா, எகிப்து, எத்தியோப்பியா, ஈரான், சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் ஆகியவை 2024-ஆம் ஆண்டு ஜனவரி 1-ஆம் தேதிமுதல் பிரிக்ஸ் கூட்டமைப்பில் அதிகாரபூர்வமாக இணையவுள்ளன.

மாநாட்டில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் குறித்து விளக்கமளிக்க தென்னாப்பிரிக்க அதிபர் சிரில் ராமபோசா, பிரதமர் மோடி, சீன அதிபர் ஷி ஜின்பிங், பிரேஸில் அதிபர் லூலா டாசில்வா ஆகியோர் கூட்டாக செய்தியாளர்களைச் சந்தித்தனர். ரஷிய அதிபர் விளாதிமீர் புதின் காணொலி வாயிலாக செய்தியாளர்களிடம் பேசினார்.



பிரிக்ஸ் மாநாட்டின்போது, தென்னாப்பிரிக்க அதிபர் சிரில் ராமபோசாவுடன் உரையாடிய சீன அதிபர் ஷி ஜின்பிங். உடன், பிரேஸில் அதிபர் டசில்வா, பிரதமர் நரேந்திர மோடி.

**பன்னாட்டு அமைப்புகளுக்கான பாடம்:** பிரதமர் மோடி கூறுகையில், 'மாறி வரும் நவீன உலகத்துக்கு ஏற்ப கூட்டமைப்பில் மாற்றங்களும் சீர்திருத்தங்களும் புகுத்தப்பட வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டே பிரிக்ஸ் கூட்டமைப்பு விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இது ஐ.நா. உள்ளிட்ட பன்னாட்டு அமைப்புகளுக்கு பிரிக்ஸ் கூட்டமைப்பு விடுக்கும் முக்கியமான செய்தியாகும்.

6 நாடுகள் புதிய உறுப்பினர்களாக இணைவது, கூட்டமைப்பின் பயணத்துக்குப் புதிய ஆற்றலை வழங்கும். அந்த நாடுகளுடன் வரலாற்று ரீதியில் இந்தியா பாரம்பரிய நல்லுறவைக் கொண்டுள்ளது. பிரிக்ஸின் விரிவாக்கத்துக்கு இந்தியா எப்போதுமே ஆதரவளித்து வந்துள்ளது. அத்தகைய நடவடிக்கைகள் கூட்டமைப்பை மேலும் வலுப்படுத்தும் என்பதில் இந்தியா உறுதி கொண்டுள்ளது. இந்த மாநாட்டில் பல்வேறு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டது மகிழ்ச்சியளிக்கிறது' என்றார்.

**விருப்பத்துக்கு மதிப்பளிப்பு:** அதிபர் ராமபோசா கூறுகையில், 'பிரிக்ஸ் நாடுகளுக்கு இடையே பொதுவான செலாவணியைப் பயன்பாட்டுக்குக் கொண்டு வருவது தொடர்பாக ஆராய்வதற்கான பொறுப்பு சம்பந்தப்பட்ட நாடுகளின் நிதியமைச்சர்கள்-மத்திய வங்கி ஆளுநர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு மாநாட்டுக்குள் அதற்கான அறிக்கையை அவர்கள் தாக்கல் செய்வர்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்று வரும் போர், மோதல்கள் குறித்தும் மாநாட்டில் விவாதிக்கப்பட்டது. பிரச்னைகளுக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண வலியுறுத்தப்பட்டது. தெற்குலக நாடுகளின் குரலுக்கு வலுசேர்க்கவும் மாநாட்டில் உறுதியேற்கப்பட்டது. சர்வதேச விதிகளைக் கடைப்பிடித்து, பன்முகத்தன்மைக்கு மதிப்பளிக்கவும் மாநாட்டில் முடிவெடுக்கப்பட்டது' என்றார்.

**புதிய தொடக்கம்:** சீன அதிபர் ஷி ஜின்பிங் கூறுகையில், 'பிரிக்ஸ் கூட்டமைப்புக்கான புதிய தொடக்கமாக இது அமைந்துள்ளது. இதன் மூலமாக கூட்டமைப்பு நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு மேலும் வலுவடையும். சர்வதேச அமைதிக்கும், வளர்ச்சிக்கும் இந்த நடவடிக்கை வழிவகுக்கும்' என்றார்.

பிரிக்ஸ் கூட்டமைப்பின் விரிவாக்கத்துக்கு ரஷிய அதிபர் புதினும் ஆதரவு தெரிவித்தார்.

## எல்லைக் கோட்டை மதித்து செயல்பட வேண்டும்: சீன அதிபர் ஜின்பிங்கிடம் பிரதமர் மோடி வலியுறுத்தல்

**ஜோஹன்னஸ்பர்க், ஆக. 24:** கிழக்கு லடாக்கில் எல்லை கோட்டை மதித்து செயல்படுமாறு சீன அதிபர் ஷி ஜின்பிங்கிடம் பிரதமர் மோடி தெரிவித்தார்.

தென்னாப்பிரிக்காவின் ஜோஹன்னஸ்பர்க் நகரில் பிரிக்ஸ் உச்சிமாநாடு நடைபெற்றது. இதில் பங்கேற்ற பிரதமர் மோடி, மாநாட்டுக்கு இடையே பல்வேறு நாட்டுத் தலைவர்களை சந்தித்தார். அதன் ஒரு பகுதியாக சீன அதிபர் ஷி ஜின்பிங்கையும் அவர் சந்தித்து பேசினார். இந்தச் சந்திப்பு புதன்கிழமை நடைபெற்றதாக தெரிகிறது.

இதுதொடர்பாக ஜோஹன்னஸ்பர்கில் இந்திய வெளியுறவுச் செயலர் வினய் குவாத்ரா செய்தியாளர்களிடம் வியாழக்கிழமை கூறியதாவது:

சீன அதிபர் ஜின்பிங் உடனான சந்திப்பின்போது, இந்திய-சீன எல்லைப் பகுதிகளின் மேற்கு கிளைப் பகுதியில் உள்ள எல்லை கோடு சார்ந்த பிரச்னைகள் குறித்து பிரதமர் பேசினார். அப்போது அந்த பிரச்னைகள் குறித்த இந்தியாவின் கவலையை பிரதமர் எடுத்துரைத்தார்.

இருநாடுகளுக்கு இடையிலான உறவு இயல்பு நிலைக்குத் திரும்ப எல்லை பகுதிகளில் அமைதியை பராமரித்து, எல்லை கோட்டை மதித்து செயல்படுவது அவசியம் என்றும் பிரதமர் வலியுறுத்தினார்.

இதன் அடிப்படையில், எல்லைப் பகுதியில் குவிக்கப்பட்டுள்ள இருநாட்டு ராணுவத்தினரை விரைந்து திரும்பப் பெற்று, அவர்கள் இடையே நிலவும் மோதல்போக்கின் தீவிரத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கையை மும்முரமாக்க, தத்தமது நாடுகளின் அதிகாரிகளுக்கு உத்தரவிட இருவரும் தீர்மானித்தனர் என்று தெரிவித்தார்.

ஜோஹன்னஸ்பர்கில் வியாழக்கிழமை செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்துகொள்ள மேடைக்குச் சென்றபோது பிரதமர் மோடியும், அதிபர் ஜின்பிங்கும் சில நிமிஷங்கள் பேசியவாறு நடந்துசென்றனர்.

அந்த செய்தியாளர்கள் சந்திப்பு நிறைவடைந்த பின்னரும், இருவரும் சில நிமிஷங்கள் பேசிவிட்டு கைகுலுக்கிச் சென்ற காட்சிகள் தென்னாப்பிரிக்க அரசு ஊடகத்தில் வெளியாகின. எனினும் இருவருக்கும் இடையே முறைப்படி ஏற்பாடு செய்யப்பட்ட எந்தச் சந்திப்பும் நடைபெறவில்லை.

**நலம் விசாரிப்பு:** முன்னதாக, தென்னாப்பிரிக்க அதிபர் புதன்கிழமை இரவு அளித்த விருந்தின்போது, சீன அதிபர் ஷி ஜின்பிங்கிடம் பிரதமர் மோடி நலம் விசாரித்ததாகத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

**எத்தியோப்பிய பிரதமருடன் சந்திப்பு:** பிரிக்ஸ் மாநாட்டின் ஒரு பகுதியாக, எத்தியோப்பிய பிரதமர் அபி அகமது அலி, ஈரான் அதிபர் இப்ராஹிம் ரெய்சி, செனகல் அதிபர் மேக்கி சால் உள்ளிட்டோரையும் பிரதமர் மோடி சந்தித்து இருதரப்பு பேச்சு நடத்தினார்.

பிரிக்ஸ் பிளஸ் பேச்சுவார்த்தையின் கீழ் ஆப்பிரிக்க நாடுகளின் தலைவர்களையும் பிரதமர் சந்தித்தார்.

## பொருளாதார மீட்சிக்கு ஆதரவு: பிரிக்ஸ் கோரிக்கை

**ஜோஹன்னஸ்பர்க், ஆக. 24:** பிரிக்ஸ் மாநாட்டின் முடிவில் பிரிக்ஸ் தலைவர்கள் வெளியிட்ட கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:

உலகளாவிய பொருளாதார மீட்சி மற்றும் நீடித்த வளர்ச்சியை அடைய வேண்டியுள்ளது. அவற்றை அடைவதில் உலகப் பொருளாதாரத்துக்கு உள்ள சவால்கள் மற்றும் அபாயங்களைக் கையாள்வதில், பிரிக்ஸ் நாடுகள் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டியதன் முக்கியப் பங்கு அறியப்பட்டுள்ளது.

போரால் பாதிக்கப்பட்ட நாடுகளின் மறுகட்டமைப்பு மற்றும் வளர்ச்சிக்குப் பங்களிப்பது முக்கியம். தங்கள் வளர்ச்சி இலக்குகளை எட்ட உலக நாடுகளுக்கு சர்வதேச சமூகம் உதவ வேண்டும்.

கரோனா பரவலால் ஏற்பட்ட பொருளாதார பாதிப்புகளில் இருந்து மீள்வதற்கு ஒன்றிணைந்து பணியாற்றுவதில், உலக நாடுகளுக்கு சர்வதேச சமூகம் ஆதரவளிக்க வேண்டும்.

பொருளாதார மீட்சி மற்றும் நீடித்த வளர்ச்சிக்கு உதவ சர்வதேச கடன் குறித்த செயல்திட்டத்தை சரியாக கையாள வேண்டியது அவசியம். பலதரப்பு வளர்ச்சி வங்கிகள் கடன் அளிக்கும் திறனை அதிகரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளனர்.

# சிறு வணிகர்களுக்கும் சம வாய்ப்புகள்

## ஜி20 கூட்டத்தில் பிரதமர் மோடி வலியுறுத்தல்

**ஜெய்ப்பூர், ஆக. 24:** இணைய வர்த்தக நடவடிக்கைகள் வேகமாக வளர்ந்து வரும் நிலையில் பெரு வணிகர்களுடனான போட்டியை சமாளிக்கும் நோக்கில் சிறு வணிகர்களுக்கும் சம வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும் என ஜி20 கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

ஜி20 கூட்டமைப்பு நாடுகளின் வர்த்தக அமைச்சர்களுக்கான கூட்டம் ராஜஸ்தானின் ஜெய்ப்பூரில் வியாழக்கிழமை நடைபெற்றது. அக்கூட்டத்துக்குப் பிரதமர் மோடி காணொலி வாயிலாக வழங்கிய செய்தியில் கூறியுள்ளதாவது:

உணவு தானியங்கள், நுகர்வுப் பொருள்கள் உள்ளிட்டவற்றின் உண்மையான விலையை நுகர்வோர் அறிந்து கொள்வதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். நுகர்வோரின் குறைகளைத் தீர்ப்பதற்கான மையங்கள் உருவாக்கப்படுதல் அவசியம்.



வர்த்தக நடவடிக்கைகளை எண்மமயமாக்குவதும் இணையவழி வர்த்தக நடவடிக்கைகள் அதிகரிப்பதும் சந்தை வாய்ப்புகளை அதிகரிக்கும். வர்த்தகம் சார்ந்த ஆவணங்கள் அனைத்தையும் எண்மமயமாக்குவதற்கான நடவடிக்கைகளை ஜி20 வர்த்தக அமைச்சர்கள் கூட்டம் மேற்கொண்டு வருகிறது. இதன் மூலமாக எல்லை கடந்த வர்த்தக நடவடிக்கைகள் எளிதாகும்.

எல்லை கடந்த இணையவழி வர்த்தகங்கள் அதிகரிக்கும் அதே வேளையில், பல்வேறு சவால்களும் முளைத்துள்ளன. பெரு வணிகர்களுக்கும் சிறு வணிகர்களுக்கும் இடையேயான போட்டியில் சம வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

**நிலையான கொள்கைகள்:** சர்வதேச வர்த்தக நடவடிக்கைகள், முதலீடுகளை அதிகரிப்பது தொடர்பாக அமைச்சர்கள் விரிவாக விவாதிக்க வேண்டும். இந்தியப் பொருளாதாரம் வலிமையுடன் திகழ்கிறது. இந்தியாவில் வர்த்தகம், முதலீட்டுக்குப் பல்வேறு வாய்ப்புகள் காணப்படுகின்றன.

உலகின் பெரிய பொருளாதார நாடுகளின் பட்டியலில் கடந்த 9 ஆண்டுகளில் 10-ஆவது இடத்தில் இருந்து 5-ஆவது இடத்துக்கு இந்தியா முன்னேறியுள்ளது. அடுத்த சில ஆண்டுகளில் 3-ஆவது பெரிய பொருளாதார சக்தியாக இந்தியா உருவெடுக்கும். எண்மமயமாக்கலுக்கும் புத்தாக்கத்துக்கும் இந்தியா தொடர்ந்து முக்கியத்துவம் அளித்து வருகிறது. தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவான கொள்கைகளை இந்திய அரசு வடிவமைத்து வருகிறது. அதனால், அந்நிய நேரடி முதலீடு தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

**சந்தை வாய்ப்புகள்:** எதிர்கால சவால்களை சமாளித்து, சர்வதேச அளவில் உணவு தானியங்கள் விநியோகத்தில் எந்தவித இடையூறும் இல்லாமல் இருப்பதை உறுதி செய்வதற்கான திட்டத்தை இந்தியா முன்மொழிந்துள்ளது. அத்திட்டம் குறித்து விரிவாக விவாதிக்கப்பட வேண்டும்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும், வேலை உருவாக்கத்திலும் சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் முக்கியப் பங்கு வகித்து வருகின்றன. அந்நிறுவனங்களுக்கு ஆதரவு வழங்குவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும். அந்நிறுவனங்களுக்கான சந்தை வாய்ப்புகள் அதிகரிக்கப்பட வேண்டும். ஒருங்கிணைந்த எதிர்காலத்தை உறுதி செய்யும் நோக்கில் சர்வதேச வர்த்தக கட்டமைப்பை உருவாக்க இக்கூட்டம் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்றார் பிரதமர் மோடி.



# 'ராக்கெட்ரி'

## திரைப்படத்துக்கு தேசிய விருது

**சிறந்த தமிழ்ப் படம் 'கடைசி விவசாயி'**

**புது தில்லி, ஆக. 24:** 'ராக்கெட்ரி: தி நம்பி எஃபெக்ட்' திரைப்படத்துக்கு 2021-ஆம் ஆண்டுக்கான தேசிய விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த ஆண்டில் வெளியான சிறந்த தமிழ்த் திரைப்படமாக 'கடைசி விவசாயி' தேர்வு செய்யப்பட்டுள்ளது. 'ஆர்ஆர்ஆர்' திரைப்படத்துக்கு 6 தேசிய விருதுகளும், 'கங்குபாய் காத்தியாவாடி' திரைப்படத்துக்கு 5 தேசிய விருதுகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

2021-ஆம் ஆண்டுக்கான தேசிய திரைப்பட விருதுகளைத் திரைப்பட இயக்குநர் கேத்தன் மேத்தா தலைமையிலான குழு தேர்வு செய்தது. அது தொடர்பான விவரங்களை மத்திய செய்தி ஒலிபரப்புத் துறை அமைச்சர் அனுராக் தாக்குரிடம் தில்லியில் அக்குழு வியாழக்கிழமை வழங்கியது. பின்னர், தேசிய விருது வென்ற திரைப்படங்கள், நடிகர்கள், தொழில்நுட்பக்கலைஞர்கள் உள்ளிட்ட விவரங்கள் வெளியிடப்பட்டன.

அதன்படி, சிறந்த திரைப்படத்துக்கான தேசிய விருது மாதவன் இயக்கி நடித்த 'ராக்கெட்ரி: தி நம்பி எஃபெக்ட்' (ஹிந்தி) திரைப்படத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. சிறந்த நடிகருக்கான தேசிய விருதை 'புஷ்பா: தி ரைஸ்' படத்தில் நடித்த அல்லு அர்ஜுன் வென்றுள்ளார். இதன் மூலமாக, சிறந்த நடிகருக்கான தேசிய விருதைப் பெறும் முதல் தெலுங்கு நடிகர் என்ற பெருமையை அல்லு அர்ஜுன் பெற்றுள்ளார்.

'கங்குபாய் கத்தியவாடி' படத்தில் நடித்த ஆலியா பட், 'மீமி' படத்தில் நடித்த கிருத்தி சனோன் ஆகியோருக்கு சிறந்த நடிக்கைக்கான தேசிய விருது பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளது.

சிறந்த பின்னணிப் பாடகிக்கான தேசிய விருதை ஸ்ரேயா கோஷல் வென்றுள்ளார். பார்த்திபன் இயக்கி நடித்த 'இரவின் நிழல்' படத்தில் 'மாயவா தூயவா' பாடலைப் பாடியதற்காக அந்த விருதை அவர் பெற்றுள்ளார். சிறந்த பின்னணிப் பாடகிக்கான தேசிய விருதை ஸ்ரேயா கோஷல் பெறுவது இது 5-ஆவது முறையாகும். தமிழ்ப் பாடலுக்காக அவர் முதல் முறையாக தேசிய விருதை வென்றுள்ளார்.

எம்.மணிகண்டன் இயக்கிய 'கடைசி விவசாயி' படமானது சிறந்த தமிழ்ப் படத்துக்கான தேசிய விருதைப் பெற்றுள்ளது. சிறப்பு விருதுக்கும் அப்படம் தேர்வாகியுள்ளது. சிறந்த கல்விக் குறும்படமாக பி.லெனின் இயக்கிய 'சிற்பிகளின் சிற்பங்கள்' தேர்வாகியுள்ளது.

கரோனா தொற்றுப் பரவல் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட 69-ஆவது தேசிய திரைப்பட விருதுகள் வழங்கும் நிகழ்ச்சி விரைவில் நடைபெறும் எனத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

| | |
|---|---|
| சிறந்த திரைப்படம் | ராக்கெட்ரி: தி நம்பி எஃபெக்ட் (ஹிந்தி) |
| சிறந்த புதுமுக இயக்குநருக்கான இந்திரா காந்தி விருது | விஷ்ணு மோகன் (மேப்படியான்-மலையாளம்) |
| சிறந்த பிரபல திரைப்படம் | ஆர்ஆர்ஆர் (தெலுங்கு) |
| சிறந்த இயக்குநர் | நிகில் மஹாஜன் (கோதாவரி-மராத்தி) |
| சிறந்த நடிகர் | அல்லு அர்ஜுன் (புஷ்பா: தி ரைஸ்) |
| சிறந்த நடிகை (இருவர்) | ஆலியா பட் (கங்குபாய் காத்தியாவாடி), கிருத்தி சனோன் (மீமி) |
| சிறந்த துணை நடிகர் | பங்கஜ் திரிபாதி (மீமி) |
| சிறந்த துணை நடிகை | பல்லவி ஜோஷி (தி காஷ்மீர் ஃபைல்ஸ்) |
| சிறந்த குழந்தை நட்சத்திரம் | பவின் ரபாரி (செல்லோ ஷோ) |
| சிறந்த இசையமைப்பாளர் (பாடல்) | தேவிஸ்ரீபிரசாத் (புஷ்பா: தி ரைஸ்-தெலுங்கு) |
| சிறந்த இசையமைப்பாளர் (பின்னணி இசை) | எம்.எம்.கீரவாணி (ஆர்ஆர்ஆர்-தெலுங்கு) |
| சிறந்த பின்னணிப் பாடகர் | காலபைரவா (ஆர்ஆர்ஆர்) |
| சிறந்த பின்னணிப் பாடகி | ஸ்ரேயா கோஷல் (இரவின் நிழல்) |
| சிறந்த ஒளிப்பதிவு | ஆவிக் முகோபாத்யாய (சர்தார் உத்தம்-ஹிந்தி) |
| சிறந்த அசல் திரைக்கதை | ஷாஹி கபீர் (நாயாட்டு-மலையாளம்), |
| சிறந்த தழுவல் திரைக்கதை | சஞ்சய் லீலா பன்சாலி (கங்குபாய் காத்தியாவாடி-ஹிந்தி) |
| சிறந்த வசனம் | உத்கர்ஷிணி வசிஷ்டா, பிரகாஷ் கபாடியா (கங்குபாய் காத்தியாவாடி-ஹிந்தி) |
| சிறந்த படத்தொகுப்பு | சஞ்சய் லீலா பன்சாலி (கங்குபாய் காத்தியாவாடி-ஹிந்தி) |
| சிறந்த ஆடை வடிவமைப்பு | வீர கபூர் (சர்தார் உத்தம்-ஹிந்தி) |
| சிறந்த ஒப்பனை | பிரீத்திஷீல் சிங் டிசோசா (கங்குபாய் காத்தியாவாடி-ஹிந்தி) |
| சிறந்த நடன அமைப்பு | பிரேம் ரக்ஷித் (ஆர்ஆர்ஆர்-தெலுங்கு) |
| சிறந்த சண்டை அமைப்பு | கிங் சாலமன் (ஆர்ஆர்ஆர்-தெலுங்கு) |
| சிறந்த தமிழ்ப் படம் | கடைசி விவசாயி |
| சிறந்த கல்விக் குறும்படம் | சிற்பிகளின் சிற்பங்கள் |
| தேசிய ஒருமைப்பாடு திரைப்படத்துக்கான நர்கீஸ் தத் விருது | தி காஷ்மீர் ஃபைல்ஸ் (ஹிந்தி) |
| சமூக பிரச்னைகளை அலசும் சிறந்த திரைப்படம் | அனுநாத்-தி ரெசொனன்ஸ் (அஸ்ஸாமீஸ்) |
| சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தும் சிறந்த திரைப்படம் | ஆவாச வியூஹம் (மலையாளம்) |
| சிறந்த குழந்தைகள் திரைப்படம் | காந்தி அண்ட் கோ (குஜராத்தி) |

EVA STALIN IAS A